2. அறிவிப்பு.

மேலவையில் இருந்து வரப்பெற்ற செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவை கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகளை திருத்தம் ஏதும் இன்றி நிறைவேற்றியதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்ற பேரவை சட்ட முன் வடிவு எண். 25/1978).

2. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு நாடக நிகழ்ச்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1978).

3. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 40/1978).

4. தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரிக்கு நீடித்தல்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1979.)

3. தகவல் கோரல்.

(அ) உரிமைப் பிரச்சினை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் நேற்றைய தினம் ஒரு உரிமை மீறல் பிரச்சினை இங்கே எழுப்பினேன். அப்போது மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் 'அது என்னுடைய கவனத்திற்கு வந்து விட்டது. ஆகவே நாளை எடுத்துக் கொள்ளலாம்' என்று கூறினார்கள். ஆகவே அதனை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அதனைத் தன்னுடைய கவனத்திற்கு வந்திருப்பதாகவும் ஆகவே அதனை நாளை அதாவது இன்று எடுத்துக்கொள்வதாகவும் கூறினார்கள். தலைவர் இங்கே வந்த பிறகு அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 24]

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, பொதுவாக இன்று ஒரு முக்கியமான பிரச்சினை, கோர்ட்டுகள் இயங்கவில்லை..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 41, 42 ஆகிய பிரிவுகள் எவை எவை எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு இது மாதிரி பிரச்சினைகளைக் கிளப்பலாம். ஆகவே எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக்கொள்கிறேன் அதாவது எவை எவை எடுத்துக் கொள்ளப்படப் போகின்றன என்பதைத் தெரிவிப்பதற்கு முன்பே இவ்வாறு கேட்பது சரியல்ல.

(4) ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(அ) வழக்கறிஞர்களது வேலை நிறுத்தம் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருப்பது குறித்து.

1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16ஆம் நாள் முதல் தமிழகத்தில் வழக்கறிஞர்கள் நடத்துகிற வேலை நிறுத்தத்தின் காரணமாக நீதித் துறை இயங்காமல் இருக்கிற பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்மென்று கேட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் திரு. ஆர். உமாநாத், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. கந்தசாமி, திரு. மு. ஆறுமுகம் திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. மு. அம்பிகாபதி, திரு. பொ. உத்திராபதி, திரு. செ. சிவசாமி, திரு. ரா. கிருஷ்ணன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாள் அன்றே கொடுத்திருக்கிறேன். அதாவது ''இந்திய அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட மூன்று பிரிவுகளில் ஒன்றான நீதி மன்றங்கள் தமிழ்நாட்டில் செயல்படாமல் இருக்கின்றது. குறிப்பாக சென்னை உயர்நீதி மன்றம் உட்பட பல்வேறு நீதிமன்றங்கள் தொடர்ந்து செயல்படாததால் தமிழக மக்கள் பெறவேண்டிய நீதியைக் கூட சில நாட்களாக பெற முடியாமல் தவிக்கின்றார்கள். தமிழகம் பூராவும் இதனால் ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலையைக் குறித்து விவாதிக்க'' அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இதனை நான் 21ஆம் தேதியே கொடுத்திருக்கிறேன்.. ஏன் எடுத்துக்கொள்ளப்படவில்லை?